**செய்தி வெளியீடு:065** **நாள்: 01.02.2017**

தமிழ்நாட்டில், பன்றிக்காய்ச்சல் போன்ற தொற்று நோய்கள் வராமல் தடுப்பதற்கு எடுக்கப்பட்ட மற்றும் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் தலைமையில் அண்ணாநகர் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழக மருந்துக் கிடங்கில் இன்று (01.02.2017) கள ஆய்வு மேற்கொள்ளப்பட்ட பின் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்த ஆய்வுக் கூட்டத்தில், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் செல்வி அபூர்வா, இ.ஆ.ப., பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் டாக்டர் கே. குழந்தைசாமி மற்றும் சுகாதாரத் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பன்றிக்காய்ச்சல், பருவ காலங்களில் காணப்படும் குணப்படுத்தக் கூடிய சாதாரண புளூ காய்ச்சல் என்று உலக சுகாதார நிறுவனம் அறிவித்த போதிலும், தமிழ்நாட்டில் இந்த காய்ச்சலை வராமல் தடுக்கவும், இதனால் இறப்புகள் ஏற்படக்கூடாது என்ற வகையிலும் தமிழக அரசு அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுத்த காரணத்தினால் அனைத்து காய்ச்சலும் தமிழ்நாட்டில் முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

- பன்றிக்காய்ச்சலுக்கு மருத்துவரின் ஆலோசனைப்படி மருந்து உட்கொண்டால் இந்நோயை எளிதாக குணப்படுத்தலாம். தமிழகத்தில் 11,14,000 டாமிபுளூ மாத்திரைகள், 31,272 டாமிபுளூ சிரப், 10,649 மருத்துவ பாதுகாப்பு கவசங்கள், 30,681 N95 பாதுகாப்பு முக கவசங்கள் மற்றும் 3,00,000 மூன்று அடுக்கு முக கவசங்களும் கையிருப்பில் உள்ளன.

- பன்றிக்காய்ச்சலைக் கண்டறிவதற்கு தமிழகத்தில் சிறப்பு மையங்களாக, கிண்டி கிங் நோய் தடுப்பு மருந்து மற்றும் ஆராய்ச்சி நிலையம் உட்பட ஆறு ஆய்வு மையங்களும், புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் ஒரு ஆய்வு மையமும் 13 தனியார் ஆய்வு மையங்களும் செயல்படுகின்றன. **அரசு மருத்துவ நிலையங்களில் பரிசோதனைகள் முற்றிலும் இலவசமாக செய்யப்படுகிறது.**

- காய்ச்சல் தொடர்பாக, மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

- காய்ச்சல் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கென, சிறப்பு வார்டுகள், அனைத்து மாவட்ட அரசு மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ஏற்படுத்தப்பட்டு, சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

- மத்திய சுகாதாரத்துறை அறிவுரையின்படி, மருத்துவமனைகளில் பணியாற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்களுக்கு இந்நோய் வராமல் தடுக்க, தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளது.

- பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குனரகத்தில், 24 மணி நேரமும் மருத்துவ ஆலோசனைகள் பெறும் வகையில், தகவல் மையம் (தொலைபேசி எண் 044–24350496, 044–24334811, 94443 40496 மற்றும் 93614 82899) ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் தகவல்கள் பெற '104' சேவையையும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

- கூடுதல் பாதிப்பு ஏற்படும் வாய்ப்புள்ள முதியோர்கள், குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்கள், சர்க்கரை நோய் மற்றும் இதய நோய் பாதிப்பு உள்ளவர்கள் பன்றிக்காய்ச்சல் அறிகுறி காணப்பட்டால் உடனடியாக மருத்துவரை அணுகி சிகிச்சை பெறவேண்டும். ஆரம்ப நிலையில் இந்த நோயை கண்டறிந்து மருந்து உட்கொண்டால் இறப்பு ஏற்படாமல் நோயை குணப்படுத்த முடியும்.

பன்றிக்காய்ச்சல் வராமல் தடுக்க கீழே குறிப்பிடப்பட்டுள்ள சில சுகாதாரமான வழிமுறைகளை பொதுமக்கள் பின்பற்றவேண்டும்:

- அண்டை மாநிலம் மற்றும் வெளிநாடுகளுக்கு சென்று வந்தவர்களுக்கு காய்ச்சல் ஏற்படும்போது உடனடியாக மருத்துவர்களை அணுகி எந்த வகையான காய்ச்சல் என அறிந்து சிகிச்சை பெறவேண்டும்.

- இருமும் பொழுதும், தும்மும் பொழுதும் கைக்குட்டையால் முகத்தை மறைத்துக் கொள்ளவேண்டும். மேலும் அடிக்கடி சோப்பு போட்டு கைகளை நன்றாக தேய்த்து கழுவ வேண்டும். குறிப்பாக வீட்டிலிருந்து பணியிடம் மற்றும் வெளியிடங்களுக்கு சென்றவுடன் ஒரு முறை கைகளை நன்றாக கழுவ வேண்டும். மீண்டும் வீடு திரும்பியவுடன் ஒரு முறை கைகளை கழுவ வேண்டும்.

- காய்ச்சல், சளி, இருமல், தொண்டைவலி போன்ற அறிகுறிகள் தென்பட்டால் உடனே மருத்துவரை அணுகி பரிசோதித்துக் கொள்ளவேண்டும். சுயமாக மருந்துகள் உட்கொள்வதை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும். மேலும் மருந்துக் கடைகளில் மருத்துவரின் சீட்டு இல்லாமல் மருந்துகளை வாங்கி உட்கொள்வதையும் கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்.

பன்றிக்காய்ச்சல் குறித்து பொதுமக்களிடையே அதிக அளவில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று துறை அலுவலர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அறிவுரை வழங்கினார். மேலும் பன்றிக்காய்ச்சல் குறித்து பொதுமக்கள் பீதியடைய வேண்டாம் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு துறை, சென்னை.9**